2012 மே 8]

சித்திரைத் திருநாளை உழவர் பெருவிழாவாக அறிவித்து, ஒரு மாத காலம் கிராமங்கள்தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி, இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயிகளின் ஒளிவிளக்காய்த் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களே! கடவுள்கூட கேட்டால்தான் வரம் கொடுப்பார், ஆனால், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்காமலேயே, வெங்கடேசபுரம், பொன்னுசங்கம்பட்டி பகுதிகளில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

229—

சாலை வசதி

***5320—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனக்கோட்டத்திலுள்ள குன்றி, மாக்கம்பாளையம், மல்லியம்மன் துர்க்கம் ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, சத்தியமங்கலம் வட்டம் அஞ்சணைப்பிரிவு முதல் குன்றி வரையுள்ள 9.60 கி.மீ. தூர வனச் சாலையைப் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த அரசாணை எண் 182(டி) கிராம மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் ரூ.382.30 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதற்காக 9.6 கி.மீ. தூர சாலைகளுக்கு மதிப்பீடு தலைமை வனப்

பாதுகாவலரால் ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் 29-12-2011 இல் வழங்கப்பட்டு, சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடம்பூர்-மாக்கம்பாளையம் சாலை குத்தியாலத்தூர் காப்புக்காட்டில் அமைந்துள்ளது. இதனுடைய நீளம் 15 கி.மீ. அகலம் 3 மீ. ஆகும். இச்சாலைக்கு காப்புக்காட்டு அறிவிக்கையில் வழித் தடம் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இச்சாலையில் இதுவரை 5 கி.மீ. தூரம் திருச்சி வனப் பொறியாளரால் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 10 கி.மீ. தூரத்திற்கு மேம்பாட்டுப் பணிகளைப் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ள திருச்சி வனப் பொறியாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மல்லியம்மன் துர்க்கம் சாலை, குத்தியாலத்தூர் காப்புக்காட்டில் அமைந்துள்ளது. இச்சாலைக்குக் கொம்பநாயக்கன் பாளையத்திலிருந்து மல்லியம்மன் துர்க்கம் வரை குத்தியாலத்தூர் காப்புக்காடு அறிவிக்கையில் அனுமதி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 7 கி.மீ. ஆகும். ஆனால், இச்சாலை மிகவும் செங்குத்தாக உள்ளதால் பராமரிக்க இயலாத நிலை உள்ளது. மல்லியம்மன் துர்க்கத்திற்கு மாற்றுச் சாலையாக கடம்பூரிலிருந்து நடைபாதை உள்ளது. இதற்குக் காப்புக்காடு அறிவிக்கையில் அனுமதி உரிமம் அளிக்கப்படவில்லை. எனவே, மத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி, மத்திய அரசினுடைய முன் அனுமதி பெற்று, சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றி சாலை அமைக்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாக்கம்பாளையம் ஊராட்சி, தனி ஊராட்சி அதற்கும் சாலைகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அதற்கும் நன்றி. மல்லியம்மன் துர்க்கம் கிராமத்தில் சுமார் 150 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றார்கள். பள்ளிக்கூடம், சத்துணவுக் கூடம் இருக்கின்றன. ஆனால், மக்கள் கீழே வருவதற்கு ஒற்றையடிப்

2012 மே 8]

பாதைதான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது கேட்டாலும், வனக் காப்புக்காடு, வனச் சரணாலயம் என்று மத்திய அரசைக் கேட்டுதான் அந்தப் பாதையை அமைக்க வேண்டுமென்று சொல்கிறார். ** என்பதை இந்த அவையில் மீண்டும், மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், அந்த மாதிரி, ** என்று சொல்லக்கூடாது. ** என்ற அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பில் இருக்காது. உடனடியாகச் செய்யுங்கள் என்று கேட்கவேண்டும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் 3 சாலைகளைச் செப்பனிடுவதற்கு கேள்வி கேட்டிருந்தார்கள். அதிலே இரண்டு சாலைகளுடைய பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு சாலை மிகவும் செங்குத்தாக இருப்பதால் அந்தப் பணியை இப்போது உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை. ஆனால், எந்தத் துறை, சாலை அமைக்க முன்வருகிறதோ அவர்களுடைய கருத்துருவைப் பெற்று மிக விரைவிலே சாலை அமைப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'விரைவில்' என்று சொன்ன வார்த்தைக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.